# சைவ நெறி

## தரம்

## 1



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2015
இரண்டாம் பதிப்பு - 2016
மூன்றாம் பதிப்பு - 2017
நான்காம் பதிப்பு - 2018
ஐந்தாம் பதிப்பு - 2019

*எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.*

ISBN 978-955-25-0026-8

C¢ ¡ À, PÀ Â öÁ Î ±mkz v ø n UP Í z v ÚõÀ,
Aµ\õ [P Aa\PU Tmkzuõ£Úz v À
Aa] h¨ £mk, öÁ Î ° h¨ £mh x.

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



""¦ vuõQ, ©õØÓ©ø h¢x \›¯õÚ AÔÂ ß ‰»®
|õmkUS® • Ê E»QØS® AÔÄa_hµõS [PÒ''

<u>கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி</u>

Ph¢x ö\ßÓ C¸u\õ¨u[PÐUS A s ª¯Põ»©õÚx E»P Áµ»õØÔÀ Â÷\h öuõÈ Ým£ ©õØÓ[PÒ {PÌ¢uöuõ¸ Põ»©õS®. uPÁÀ öuõÈ Ým£® ©ØÖ® F hP[Pø Í • ßÚ o ¯õPU öPõ s h £À÷ÁÖ xøÓP Î À HØ£mh x›u Á Íºa] ² hß Cø n¢x ©õ n Áº ©zv ° À £À÷ÁÖ \ÁõÀPÒ ÷uõßÔ²Ò Í Ú. CßÖ \‰PzvÀ Põ n ¨£k® öuõÈÀÁõ´ ¨¤ß C¯À£õÚx ª P Âøµ Â À ]Ó¨£õÚ £À÷ÁÖ ©õØÓ[PÐUS Em£h»õ®. CzuøP¯ `Ç¼À ¦v¯ öuõÈ Ým£ AÔøÁ ²® vÓøÚ ²® A i ¨£ø h¯õPU öPõ s höuõ¸ \‰PzvÀ öÁÆ÷ÁÖ Âu©õÚ C»m\UP nUPõÚ öuõÈÀÁõ´ ¨¦PÒ E¸ÁõQßÓÚ. GvºPõ»a \ÁõÀPø Í öÁØÔöPõÒÐ ÁuØS } [PÒ £»®ö£Ó ÷Á s kö©ß£x PÀ Â Aø©a\öµßÓ ÁøP ° À GÚx® G©x Aµ] Úx® ¤µuõÚ ÷|õUP©õS®.

C»Á\U PÀ Â ° ß ]Ó¨¦ ªUPöuõ¸ ¤µv£»ÚõP E [PÐUS C»Á\©õPU QøhzxÒ Í C¢ ¡ ø» JÊ [PõP¨ £¯ß£kzxÁx® Auß‰»®÷uøÁ¯õÚ AÔøÁ¨ ö£ØÖUöPõÒÁx÷© E [PÒ J÷µ SÔU÷Põ Í õP C¸UP ÷Á s k®. Azxhß E [PÒ ö£Ø÷Óõ ºPÐm£h ‰zu \÷PõuµºP Î ß ]µ©zvÚx® v¯õPzvÚx® ¤µv£»ÚõP÷Á Aµ] ÚõÀ C»Á\¨ £õh ¡ ÀPø Í E [PÐUS¨ ö£ØÖzuµ • i QÓx Gß£øu²® } [PÒ Â Í [QUöPõÒ Í ÷Á s k®.

E»QÀ ªP ÷ÁP©õP ©õÔ Á ¸® _ØÓa `ÇÀ ©õØÓzvØS¨ ö£õ ¸¢x® ÂuzvÀ ¦v¯ £õhzvmhzøu Aø©¨£uØS® PÀ Âz xøÓ ° À wºUP©õÚ ©õØÓ[Pø Í ÷©ØöPõÒÁuØS® Kº Aµ\õP |õ® ö\¯Ø£kÁx J ¸ |õm i ß GvºPõ»® PÀ Â ‰»÷© ]Ó¨£øh²® Gß£øu ªP |ßÓõP¨ ¦›¢x øÁzxÒ÷ Íõ® Gß£uÚõ÷»¯õS®. C»Á\U PÀ Â ° ß Ea\¨ £¯øÚ A Ý£ÂzxUöPõ s k |õm i ØS ©õzvµ©ßÔ E»SU÷P ö\¯ØÔÓß ªUP Kº C» [øP¨ ¤µø\¯õP } [PÐ® Á Íº¢x {Ø£uØS wº©õ ÛUP ÷Á s i ¯x AuÚõ÷»÷¯ BS®. CuØPõP C¢ ¡ ø»¨ £¯ß£kzxÁuß ‰»® } [PÒ ö£ØÖUöPõÒÐ® AÔÄ E [PÐUS EuÄö©ß£x GÚx |®¤UøP¯õS®.

Aµ_ E [PÒ PÀ Â ° ß { ªzu® ö\»Â kQßÓ ªPÄ® Ti ¯ {vzöuõøPUS ö£Ö©vö¯õß øÓa ÷\º¨£x E [PÒ Phø©¯õÁxhß £õh\õø»U PÀ Â ³hõP } [PÒ ö£ØÖUöPõÒÐ® AÔÄ ©ØÖ® vÓßPÒ Gß£Ú÷Á E [PÒ GvºPõ»zøuz wº©õ ÛUQßÓÚ Gß£øu²® } [PÒ |ßS PÁÚzvØ öPõÒ Í ÷Á s k®. } [PÒ \‰PzvÀ G¢u {ø» ° ¼ ¸¢u÷£õx® \P» uøhPø Í ²® uõ s i \‰PzvÀ ªP E¯º¢uöuõ¸ ChzvØS¨ £¯ o US® BØÓÀ PÀ Â ‰»©õP÷Á E [PÐUSU QøhUQßÓx Gß£øu } [PÒ |ßS Â Í [QU öPõÒ Í ÷Á s k®.

GÚ÷Á C»Á\UPÀ Â ° ß ªPÄ® Ti ¯ ¤µv£»øÚ ¨ ö£ØÖ,©v ¨¦ ªUPöuõ¸ ¤µø\¯õP |õø Í ¯ E»øP } [PÒ öÁØÔ öPõÒÁuØS® C¢|õm i À ©mk©ßÔ öÁ Î |õkP Î ÀTh C» [øP ° ß |õ©zøu C» [Pa ö\´ÁuØS® E [P Í õÀ C¯¾©õPmk® GÚ PÀ Â Aø©a\º Gß ÁøP ° À |õß ¤µõºzvUQß÷Óß.

அகில விராஜ காரியவசம்
PÀ Â Aø©a\º

## முன்னுரை

நீங்கள் பிறந்திருப்பது இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் போற்றப்படக்கூடிய ஒரு நாட்டிலாகும். உங்கள் நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது ஒரு சிறிய நாடாகத் தென்பட்டாலும் அதன் பெறுமதி விலைமதிப்பற்றதாகும். இவ்வாறான பெருமிதமிக்கதொரு மண்ணில் பிறந்துள்ள நீங்கள் அனைவரும் உண்மையிலேயே அதிஷ்டசாலிகள். மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று நற்குணமும் அறிவும் சக்தியும்மிக்க பிரசைகளாகி, எதிர்கால உலகை ஒளியூட்டுவீர்கள் என்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். அந்த எதிர்பார்ப்பை அடைவதற்குக் கல்விக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதன் ஒரு கட்டமாகவே இந்நூலையும் அது உங்களுக்கு வழங்குகின்றது.

ஆரம்பப் பிரிவுப் பாடத்திட்டத்திற்கேற்ப இதுவரைக்கும் தரம் 1, 2, 3, 4 இற்கான புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு தரம் 5 இற்கான புதிய பாடநூல்களின் அறிமுகத்துடன் ஆரம்பப் பாடத்திட்ட மறுசீரமைப்பு எனும் இக்கட்டம் நிறைவு பெறுகின்றது. தரம் 1 முதல் தரம் 5 வரை கற்கும் ஆரம்பப் பிரிவு மாணவருக்காக அரசு ஏறக்குறைய 30 வகையான பாடநூல்களைத் தயாரித்து வழங்குகின்றது. இவ்விலைமதிப்பற்ற வளத்தினைப் பயன்படுத்தி வாழ்க்கையை வளமானதாக ஆக்கிக் கொள்வது உங்கள் அனைவரினதும் கடமையாகும்.

இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்வதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

### கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

### வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

### இணைப்பாக்கம் - 2019

**சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**லெனின் மதிவானம்**

பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

### பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்**

பேராசிரியர் - ஓய்வுநிலை

**வ. விஜயலெட்சுமி**

பணிப்பாளர் - ஓய்வு

தமிழ் மொழித் துறை

தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

### நூலாக்கக் குழு

**க. சிவபாலசுந்தரம்**

ஆசிரிய ஆலோசகர் - ஹட்டன்.

**சாந்தி ரமேஸ்**

ஆசிரியர் - சைவமங்கையர் கழகம்

கொழும்பு.

*முகப்பு வடிவமைப்பு*

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

*பக்க வடிவமைப்பு*

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்


1 பிள்ளையார் 1

2 சிவபெருமான் 2

3 நாம் சைவ சமயத்தவர் 3

4 பெற்றோரைப் பணிவோம் 4

5 சிவசின்னங்கள் 6

6 தினமும் செய்வோம் 8

7 கோயிலுக்குச் செல்வோம் 11

8 பூசைப் பொருள்கள் 12

9 ஆலயம் 13
10 வீட்டில் இறை வழிபாடு 14
11 சமயப் பண்டிகைகள் 15
12 பாடசாலையில் ஒழுக்கம் 19
13 தாயுமானவர் 22
14 மாம்பழக் கதை 24
15 ஞானப்பால் உண்ட கதை 29
16 கனம் பண்ணுவோம் 35

17 ஏழைகளுக்கு உதவுவோம் 36

18 சுத்தம் பேணுவோம் 37

19 உயிர்களிடம் இரக்கம் காட்டுவோம் 39

20 ஒற்றுமையாக வாழ்வோம் 41

21 உண்மை பேசுவோம் 43

22 பகிர்ந்து உண்போம் 46

23 நற்பண்புகள் 48

24 ஆத்திசூடி 49

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

கைகாள் கூப்பித் தொழீர் – கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்

திருச்சிற்றம்பலம்

# 1 பிள்ளையார்



பிள்ளையார் முதல் வணக்கத்திற்கு உரியவர்.

பிள்ளையாரை வணங்கிச் செயல்களை ஆரம்பிப்போம்.

## 2 சிவபெருமான்



உலகைப் படைத்துக் காப்பவர் சிவபெருமான்.

நாம் யாவரும் சிவபெருமானின் குழந்தைகள்.

# 3 நாம் சைவ சமயத்தவர்




சிவபெருமான் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள்.

சிவபெருமானைத் தினந்தோறும் பக்தியுடன் வழிபடுவோம்.

**ஓம் நமசிவாய** எனும் மந்திரத்தை உச்சரித்து சிவபெருமானை வழிபடுவோம்.

# 4

# பெற்றோரைப் பணிவோம்




பெற்றோர் எமது கண்கண்ட தெய்வங்கள்.

பெற்றோரை வணங்குவோம்.

அவர்களது ஆசியைப் பெறுவோம்.



எம்மைக் காப்பவர் பெற்றோர்.

பெற்றோருக்கு உதவுவோம்.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**

# 5 சிவசின்னங்கள்



**விபூதி**



**உருத்திராக்கம்**

விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்கள்.



சைவ சமயத்தவர்கள் விபூதி தரிப்பார்கள்.

காலையும் மாலையும் விபூதி தரிப்போம்.

# 6 தினமும் செய்வோம்



காலையில் எழுவோம்.



சுத்தமான நீரில் குளிப்போம்.



திருநீறு பூசுவோம்.



தேவாரம் பாடுவோம்.



கடவுளை வணங்குவோம்.

திருச்சிற்றம்பலம்

**பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா**

**எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை**

**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்**

**நல்லூர் அருட்டுறையுள்**

**அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே.**

திருச்சிற்றம்பலம்

- சுந்தரமூர்த்தி நாயனார்

# 7 கோயிலுக்குச் செல்வோம்



பூசைப் பொருள்களைச் சேகரிப்போம்.

அவற்றைக் கழுவிச் சுத்தம் செய்வோம்.

கோயிலுக்கு எடுத்துச் செல்வோம்.

# 8 பூசைப் பொருள்கள்





இவை பூசைப் பொருள்கள்.

வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், பூ, பூமாலை, ஊதுவர்த்தி, கர்ப்பூரம்.

9

# ஆலயம்



ஆலயத்தில் வீற்றிருக்கும் இறைவனை வணங்குவோம்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

# 10 வீட்டில் இறை வழிபாடு



காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்.



பூக்கள் வைத்து, தேவாரம் பாடி, பக்தியுடன் வணங்குவோம்.

11

# சமயப் பண்டிகைகள்

## 1. தைப்பொங்கல்



தை மாதத்தின் முதல் நாள் தைப்பொங்கல் கொண்டாடுவோம்.

முற்றத்தில் கோலம் போடுவோம்.

நிறைகுடம் வைப்போம்.

புதுப் பானையில் பொங்குவோம்.




சூரியனுக்குப் பொங்கல் படைத்து, வழிபடுவோம்.

உறவினருக்கும் அயலவர்க்கும் கொடுப்போம்.

உண்டு மகிழ்வோம்.

உழவரை மதிப்போம்.

# 2. பட்டிப் பொங்கல்



தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் பட்டிப் பொங்கல்.

பட்டியை அலங்கரிப்போம்.

பசுவையும் எருதையும் நீராட்டுவோம்.



விபூதி பூசி, பொட்டு வைப்போம்.

பூமாலை போடுவோம்.

அவற்றிற்குப் பொங்கல் படைப்போம்.

நன்றியுடன் போற்றுவோம்.

# 12 பாடசாலையில் ஒழுக்கம்




வகுப்பைச் சுத்தம் செய்வோம்.



காலைப் பிரார்த்தனையில் ஈடுபடுவோம்.

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

- சேக்கிழார்



ஆசிரியர் சொற்படி நடப்போம்.





பாடம் படிப்போம்.

13

# தாயுமானவர்



ஒரு காட்டில் தாய்ப்பன்றி ஒன்று குட்டிகளுடன் வாழ்ந்து வந்தது.



ஒரு நாள் தாய்ப்பன்றி இறந்து விட்டது. குட்டிகள் பசியால் அழுதன.



சிவபெருமான் அன்பே உருவானவர்.

பன்றிக் குட்டிகள் மீது இரக்கங் கொண்டார்.

தாய்ப் பன்றியாக உருவெடுத்தார்.

மகிழ்ந்த குட்டிகள் தாய்ப்பன்றியிடம் பால் குடித்தன.

**கருணையே வடிவான கடவுளை வணங்குவோம்.**

# 14 மாம்பழக் கதை



உலகத்துக்கு கர்த்தா சிவபெருமான். அவரது சக்தி பார்வதி.

அவர்களுக்கு விநாயகர், முருகன் என இரண்டு பிள்ளைகள்.

ஒருநாள் நாரத முனிவர் அங்கு வந்தார்.

சிவபெருமானிடம் மாம்பழம் ஒன்றைக் கொடுத்தார்.



‘‘யாருக்கு மாம்பழத்தைக் கொடுப்பது?’’ என சிவன் யோசித்தார். ‘‘**முதலில் உலகைச் சுற்றி வருபவர்க்கு மாம்பழம் கிடைக்கும்**’’ என்று கூறினார்.



முருகன் மயில் மீது ஏறி, உலகைச் சுற்றிவரப் புறப்பட்டார்.

அதனைப் பார்த்த பிள்ளையார் யோசித்தார்.



‘தாயும் தந்தையுமே உலகம்’ என நினைத்தார்.

தாயையும் தந்தையையும் சுற்றி வந்தார்.




சிவனும் பார்வதியும் மகிழ்ந்தனர்.


மாம்பழத்தைப் பிள்ளையாருக்குக் கொடுத்தனர்.

எல்லா உலகமும் ஆனாய் நீயே!

# 15 ஞானப்பால் உண்ட கதை



தமிழ்நாட்டிலே சீர்காழி என்னும் திருத்தலம் உண்டு. அங்கே சிவபாதவிருதயர் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார்.



அவருக்கு ஓர் ஆண் குழந்தை இருந்தது.

ஒருநாள் அக்குழந்தையுடன் கோயிலுக்குச் சென்றார்.



அங்குள்ள குளக்கரையில் குழந்தையை இருத்தினார்.

குளிப்பதற்காக குளத்தில் இறங்கினார்.

நீரில் மூழ்கிக் குளித்தார்.



தந்தையைக் காணாத குழந்தை கோயிலைப் பார்த்து, **''அம்மா, அப்பா''** என்று அழுதது.

அழுகுரலைக் கேட்ட சிவபெருமானும் பார்வதியும் அங்கு வந்தனர்.



பார்வதியார் குழந்தைக்குப் பால் ஊட்டினார்.

பாலை  உண்ட குழந்தை, ஞானம் பெற்றது.

***‘தோடுடைய செவியன்’*** என்ற தேவாரத்தைப் பாடியது.

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடை ஏறி ஓர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசி என்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாள்
பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே.

திருச்சிற்றம்பலம்



தேவாரம் பாடிய குழந்தையே திருஞானசம்பந்தர்.

16

# கனம் பண்ணுவோம்





தாய், தந்தை, பெரியோரை விழுந்து வணங்குவோம்.

அவர்கள் சொற்கேட்டு நடப்போம்.

17

# ஏழைகளுக்கு உதவுவோம்



ஏழைகளுக்கு இரக்கம் காட்டுவோம்.

அவர்களுக்கு இயன்றவரை உதவுவோம்.

இறை அன்பைப் பெறுவோம்.


# 18 சுத்தம் பேணுவோம்



எமது உடல், உடை, காலணிகளைச் சுத்தமாக வைத்திருப்போம்.



ஆலயத்தைச் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபடுவோம்.



பாடசாலையில் குப்பை கூளங்களை உரிய இடங்களில் போடுவோம்.

19

# உயிர்களிடம் இரக்கம் காட்டுவோம்



பசுவுக்குப் புல், தண்ணீர் வைப்போம்.



பசு, எருது, நாய் என்பன எமக்கு உதவி செய்யும் பிராணிகள்.
அவற்றுக்கு இரக்கம் காட்டுவோம்.

20

# ஒற்றுமையாக வாழ்வோம்



வீட்டில் பெற்றோருடனும் சகோதரர்களுடனும் ஒற்றுமையாக வாழ்வோம்.



பாடசாலையில் எல்லோருடனும் ஒற்றுமையாக இருப்போம்.

ஒற்றுமையே பலம்.

## 21 உண்மை பேசுவோம்



கோயிலுக்கு முன்னால் இரண்டு பூக்கடைகள் இருந்தன.

அவை கந்தனுக்கும், கணேசனுக்கும் சொந்தமானவை.

அடியவர் ஒருவர் வந்தார். இறைவனுக்குச் சாத்துவதற்கு பூமாலை ஒன்று தருமாறு கந்தனிடம் கேட்டார்.

கந்தன் தன்னிடம் இருப்பவை வாடிய பூக்கள் என்று கூறி, கொடுக்க மறுத்துவிட்டான்.

அந்த அடியவர் அருகில் உள்ள கணேசனின் கடைக்குச் சென்றார். பூமாலை ஒன்று கேட்டார்.

கணேசன் அவருக்குப் பூமாலை ஒன்றைக் கொடுத்தான்.

அடியவர் பூமாலையை இறைவனுக்குச் சாத்துவதற்காக பூசகரிடம் கொடுத்தார்.

பூசகர், மாலை வாடியிருப்பதைக் கண்டார்.

இது, 'இறைவனுக்கு அணிவிக்க உகந்ததல்ல' எனக் கூறினார்.

எனவே, அடியவர் வேறொரு கடையில் பூமாலை ஒன்றை வாங்கினார்.

அந்த மாலையைப் பூசகரிடம் கொடுத்தார்.

பூசகர் இறைவனுக்குச் சூட்டினார்.

அன்று தொடக்கம் அந்த அடியவர் கணேசனின் கடைக்குச் செல்வதில்லை.

உண்மை பேசிய கந்தனின் கடைக்குச் செல்வதையே வழக்கமாகக் கொண்டார்.




உண்மை பேசுவோம்.

# 22 பகிர்ந்து உண்போம்



விசேட நாள்களில் உணவினை உறவினர்களுடன் பகிர்ந்து உண்போம்.



அயலவர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுத்து மகிழ்வோம்.

# 23 நற்பண்புகள்

சுத்தமாக இருப்போம்.

காலையும் மாலையும் கடவுளை வணங்குவோம்.

முதியோர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவுவோம்.

நல்லவற்றைக் கேட்போம்.

பகிர்ந்து உண்போம்.

உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்.

# 24 ஆத்திசூடி



ஆத்திசூடியை அருளியவர் ஔவையார்.

# கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

அறம் செய விரும்பு.

ஆறுவது சினம்.

இயல்வது கரவேல்.

ஈவது விலக்கேல்.

உடையது விளம்பேல்.

ஊக்கமது கைவிடேல்.

எண் எழுத்து இகழேல்.

ஏற்பது இகழ்ச்சி.

ஐயம் இட்டு உண்.

ஒப்புரவு ஒழுகு.

ஓதுவது ஒழியேல்.

ஔவியம் பேசேல்.


திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்
தெய்வச் சேக்கிழார்